*கவனிக்க:– 2022.01.13 ஆந் திகதிய 2262/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2268/71 - 2022 පෙබරවාරි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.02.24

*2268/71 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 277/40*

**(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டம்**

33 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி அனுர குமார மனதுங்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவெனத் திருப்தியுற்று, இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் "தொல்பொருளியல்சார் ஒதுக்கிடம்" ஒன்றாக இருத்தல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**அனுர குமார மனதுங்க,**
தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி.

கொழும்பு,
*2022, சனவரி 12.*

**அட்டவணை**

**நாயாறு தொல்பொருளியல்சார் ஒதுக்கிடத்தைக் கொண்டுள்ள இடப்பரப்பு**

*நில அளவையாளர் தலைமையதிபதியின் 70 ஆம் இலக்க இறுதி இடக்கிடப்பியல் வரைபடத்திற்கான 2019.10.07 ஆந் திகதிய 20 ஆம் இலக்கக் குறைநிரப்பியின் 71 ஆம் இலக்கத் தாளில் முறையே 2071 மற்றும் 2073 ஆம் இலக்கக் காணித்துண்டங்களாகக் குறித்துக் காட்டப்பட்டவையும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டவையுமான அக்காணித்துண்டுகள் அடங்கலும்; இக்குறைநிரப்பிகள், 2019.11.18 ஆந்*




*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*திகதியில் நில அளவையாளர் தலைமையதிபதியின் சார்பில் முல்லைத்தீவு மாவட்ட சிரேட்ட நில அளவைகள் கண்காணிப்பாளர் கே. வீ. எஸ். பீ. கெக்குலாவல என்பவரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன; இக்காணித்துண்டுகள் பின்வரும் காணிப்பரப்புகளைக் கொண்டுள்ளதுடன் வட மாகாணம், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவின்* MU *83 ஆம் இலக்க செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், செம்மலைக் கிராமத்தில் அமைந்துள்ள நாயாறு தொல்பொருளியல்சார் நோக்கங்களுக்காக ஒதுக்கவும்படுகின்றன :*

1. *காணித்துண்டம் இல. 2071 பின்வரும் எல்லைகளையுடையது :*
   *வடக்கு : காணித்துண்டம் இல. 2069;*
   *கிழக்கு : காணித்துண்டம் இல. 2069;*
   *தெற்கு : காணித்துண்டங்கள் இல. 2069, 2070, 2072; அத்துடன்*
   *மேற்கு : காணித்துண்டங்கள் இல. 2070, 2072.*

   *விஸ்தீரணத்தில் 29 ஏக்கர் 01 றூட் 8.3 பேர்ச்சுக்களைக் (11.8578 ஹெக்டயார்) கொண்டுள்ளது; அத்துடன்*

2. *காணித்துண்டம் இல. 2073 பின்வரும் எல்லைகளையுடையது :*
   *வடக்கு : காணித்துண்டங்கள் இல. 2069, 2070;*
   *கிழக்கு : காணித்துண்டங்கள் இல. 2069, 2070;*
   *தெற்கு : காணித்துண்டம் இல. 2069, அத்துடன்*
   *மேற்கு : காணித்துண்டம் இல. 2069.*

   *விஸ்தீரணத்தில் 36 ஏக்கர் 03 றூட் 39.4 பேர்ச்சுக்களைக் (14.9715 ஹெக்டயார்) கொண்டுள்ளது.*

EOG *2 - 0641*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*